**வறக்காப்பொல பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வறக்காப்பொல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதியம் 03 மூலங்களின் கீழ் 86 வேலைகளை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட ரூபா 24,982,875 கூட்டுத்தொகையான மூலதன நிதி உதவிகள் மற்றும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பொதுவைப்புக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டில் மூலதன உதவி மற்றும் மூலுதனச் செலவினம் என்பன அதே அளவால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் வருடங்களுக்காக கிடைத்த ரூபா 100,664 ஆதன வரி வருமானம் மற்றும் ரூபா 1,604 தொகையான ஏக்கர் வரி வருமானம் என்பன மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு முன்னரே பெறப்பட்ட வருமானம் ரூபா 102,268 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 12,207 தொகையான நீதிமன்ற தண்டப்பண ஊக்குவிப்புப்படிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளாமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோரின் பெறுமதி என்பன ரூபா 12,207 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 501,213 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 205,949 தொகைகள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கினதும் வருமானக் கடன்பட்டோரினதும் பெறுமதி ரூபா 707,162 வீதம் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதிகளுக்குரிய 1,143 காணி உரித்துறுதிகளுக்காக மாவட்ட காணிப் பதிவாளருக்குச் செலுத்தவேண்டிய ஊக்குவிப்புப் படி ரூபா 28,575 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளாமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் பெறுமதி என்பன ரூபா 28,575 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வறக்காப்பொல சுகாதார நிலையக் கட்டிட நிர்மாணத்திற்காக 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 180 மாதாந்த கடன் தவணைகளில் செலுத்தும் அடிப்படையில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 13,720,021 தொகை மற்றும் ரூபா 307,882 நிலுவை வட்டிப் பணம் என்பன பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ரூபா 42,670,273 தொகை செலவில் 2012 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையக் கட்டிடத்தின் பெறுமதி, காணி மற்றும்

கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 03 ஏக்கர் 03 றூட் அளவான 07 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 795,310 ஆக இருந்த போதும், அது ரூபா 931,091 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வட்டி வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் நிலையான வைப்பின் பெறுமதி என்பன ரூபா 135,781 வீதம் அதிகரித்து கணக்கின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) தெதிகம, வறக்காப்பொல, மாய்ன்னொழுவ மற்றும் அல்கம போன்ற நூலகங்களுக்காக நன்கொடையாகக் கிடைத்த புத்தகங்களின் நன்கொடைப் பெறுமதி ரூபா 95,474 ஆக இருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 115,681 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 20,207 தொகையான வருமானம் அதிகரித்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,943,801 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 74,516,186 ஆனமையால் வேறுபாடு ரூபா 43,572,385 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,037,327 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 19,586,048 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்ட பழமையான மீதியாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,087,857 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,451,331 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 20 சந்தர்ப்பங்களில் செயல்நிமித்த உப கட்டுநிதியாக வழங்க்பபட்ட தொகையிலிருந்து எஞ்சிய பணமான ரூபா 425,000 தொகை தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(3) | 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 5,348,863 பெறுமதியான 592 வைப்பு மீதிகளை ஓய்வுபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 1988 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பணியிடமாற்றும் பெற்றுச்சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 137,660 தொகையான ஊழியர் கடன் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | சப்ரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/14 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(ii) ஆம் நிபந்தனை | சபை அதிகாரப் பிரதேசத்தில் 10 பேர்ச் வீதம் 09 காணித்துண்டுகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனையிலிருந்து கிடைக்கின்ற காணிக்கூறுகளின் பெறுமதியின் அடிப்படையில் 1 சதவீத வரித்தொகை சபைக்கு செலுத்தாமை தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மாகாண சபை நிதி விதிக் கோவையின் 261.2.2 ஆம் விதி | ரூபா 100,000 தொகையை விஞ்சி இரண்டு சந்தர்ப்பங்களின் போது உபகட்டு நிதியாக ரூபா 350,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,075,413 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,425,305 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 349,892 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

## 2.2.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 7,754,942 | 2,102,397 | 5,531,828 | 2,361,179 | 5,652,545 | 3,170,649 | 8,823,194 |
| ii. | வாடகை | 204,235 | 71,988 | 3,452,860 | 3,383,624 | 132,247 | 69,236 | 201,483 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 750,000 | 778,550 | - | (28,550) | (28,550) |
| iv | ஏனைய வருமானம் | 18,510,761 | 4,709,504 | 57,040,214 | 51,265,451 | 13,801,257 | 5,774,763 | 19,576,020 |

## 2.2.2 ஆதன வரி

05 வருடங்களுக்கு ஒரு தடைவ ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்காகவும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

## 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் iii ஆவது பட்டோலையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 17

கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமையின் அடிப்படையில் சபைக்கு ரூபா 76,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**2.2.4 ஏனைய வருமானம்**

(அ) 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது 11 நிரந்தர மற்றும் தற்காலிக அறிவித்தல் பதாதைகள் பொருத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது. அந்த அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 70,655 கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 06 தோட்ட உரிமையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 885,119 தொகையான ஏக்கர் வரிப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,814,963 உம் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,283,965 உம் காணப்பட்டன.

**2.3 மிகைக் கட்டணம்**

சட்ட விதிகளுக்கு முரணாக வீட்டுத் தொலைபேசியொன்று பொருத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 14,694 தொகைக்காக மிகைக்கட்டண சான்றிதழொன்று வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) வறக்காப்பொல மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற 054-1-001-1-7380404 ஆம் இலக்க வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2013 ஒக்தோபர் மாதம் முதல் வைப்புச்செய்யப்பட்டிருந்தும் தேறாதிருந்த ரூபா 10,646 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையிலிருந்து வழங்கப்பட்ட 07 வாகனங்களின் உரித்தை பிரதேச சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 12 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,850,000 ஆகும்.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணியொன்று தொடர்பாக சபையின் பொதுச் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டுள்ள 106.5 பேர்ச் காணிப் பகுதியில் வேலி அமைத்து பாதுகாப்பிற்காக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுடலைக் கூட்டத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 1,209,600 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட போதும் மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்கப்படாதிருந்ததுடன் மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக வழங்கல் நிறுவனத்துடன் சேவை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்திராத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக ரூபா 129,600 பெறுமதி சேர் வரித்தொகையின் அடிப்படையில் வாடகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் குடியிருப்பவர்களுக்கு சுகாதார மற்றும் கல்வி வசதிகளை வழங்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் ரூபா 42,670,273 தொகை செலவில் 2013 ஆம் ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி

செய்யப்பட்ட கட்டிடம் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் சபையின் கூட்ட மண்டமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 09 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 1,645,000 நிதி ஏற்பாட்டில் 100 சதவீதமும், 06 வேலை விடயங்களில் ரூபா 556,147 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் 55 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையிலும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,201,147 தொகை சபை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 செலவின விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி ரூபா 503,154 செலவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தீர்க்கப்படாதுள்ள பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

2015 யூலை 10 ஆந் திகதி வரையில் 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணிப்பீடு செய்யப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 851,000 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்